சுருக்கம்

வீட்டுவசதி – சென்னை, நந்தனம், அண்ணா சாலையில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு சொந்தமான நிலத்தில் ரூ.832.40 கோடி மதிப்பீட்டில் மொத்தம் 3.15 ஏக்கர் நிலப்பரப்பில் LEED பிளாட்டினம் தரச் சான்றிதழ் பெற்ற வணிக இடத்தின் கோபுரம் I மற்றும் கோபுரம் II இரண்டு கோபுரங்களை உள்ளடக்கிய தமிழ்நாடு வணிக மையம் மேம்பாட்டினை திரும்பப் பெறுதல் மற்றும் கோபுரம் I மற்றும் கோபுரம் II-ஐ இணைக்கும் வளைவு வான் பாலம் கைவிடுதல் மற்றும் கோபுரம் III கட்டுமானம் – கருத்துரு கைவிடுதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (வீவ3(2)) துறை

அரசாணை (நிலை) எண். 33

நாள். 15.02.2024.
சோபகிருது வருடம், மாசி 3,
திருவள்ளுவர் ஆண்டு 2055.

படிக்கப்பட்டது :

1. அரசாணை (நிலை) எண்.8, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (வீவ3(2)) துறை, நாள். 13.01.2021.
2. அரசாணை (நிலை) எண். 21, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (வீவ3(2)) துறை, நாள். 01.02.2021.
3. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் அவர்களின் கடித எண். PW/0315A/2021, நாள். 18.02.2021, 14.05.2022, 12.05.2023 மற்றும் 27.06.2023.

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழக அரசின் செயல்திறன் பார்வையின் கீழ் குடியிருப்பு பகுதிகளின் நெரிசலை குறைக்கும் வகையில் நந்தனம், அண்ணா சாலையின் பிரதான இடத்தில் ரூ.668.14 கோடி மதிப்பீட்டில் மொத்தம் 4.96 ஏக்கர் பரப்பளவில் (தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய நிலம் 3.15 ஏக்கர் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய 1.81 ஏக்கர் நிலம் உட்பட) LEED பிளாட்டினம் தரச்சான்றிதழ் பெற்ற வணிக இடத்தின் கோபுரம் I மற்றும் கோபுரம் II இணைக்கும் வளைவு வான் பாலம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புர

Verified © RedEstate™

வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு சொந்தமான இடத்தில் உள்ள கோபுரம் III ஆகிய மூன்று கோபுரங்களை உள்ளடக்கிய தமிழ்நாடு வணிக மையத்தை மேம்படுத்துவதற்கு TNPOWERFIN மற்றும் TUFIDCO வாரியத்தின் ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு நிர்வாக ஒப்பபளிப்பிற்கான இசைவளித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் அமைக்க பங்கு தொகை தமிழ்நாடு உள்கட்டமைப்பு வாரியத்திற்கு வழங்கப்படுகிறது என ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

1. பல்வேறு வணிக மற்றும் தொடர்புடைய உள்கட்டமைப்பு வசதிகளை செயல்படுத்த "தமிழ்நாடு வர்த்தக மையம்" என்ற பெயரில் மற்றும் பாணியில் ஒரு சிறப்பு நோக்க வாகனம் (SPV) அமைப்பதற்கான ஒப்புதல்.
2. சிறப்பு நோக்க வாகனத்தின் (SPV) முன்மொழியப்பட்ட சமபங்கு அமைப்பு மற்றும் நிர்வாக அமைப்புக்கான ஒப்புதல்.
3. உத்தேச சிறப்பு நோக்க வாகனத்தில் (SPV) தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திடம் இருந்து 49% (ரூ.1.96 கோடி) பங்கு முதலீட்டுக்கான ஒப்புதல்.
4. திட்டத்திற்கான உரிய ஆவணங்களில் கையெழுத்திடவும், சிறப்பு நோக்க வாகனத்தை (SPV) இணைக்கவும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் நிர்வாக இயக்குநருக்கு அதிகாரம் வழங்கவும்.
5. அடையாளம் காணப்பட்ட தளங்களின் மேம்பாட்டை மேற்கொள்வதற்கும், சிறப்பு நோக்க வாகனத்தின் (SPV) கீழ் உள்ள பிற அரசுத் துறைகள் / நிறுவனங்களால் சொந்தமான நிலங்களில் இதுபோன்ற தொடர்புடைய வளர்ச்சிகளைப் பிரதிபலிக்கும் வகையில் புதிய வாய்ப்புகளைத் தொடர சிறப்பு நோக்க வாகனத்திற்கான (SPV) ஒப்புதல்.
6. மேலே அடையாளம் காணப்பட்ட நிலங்களை சிறப்பு நோக்க வாகனத்திற்கு (SPV) குத்தகைக்கு வழங்க விதிமுறைகள் அந்தந்த நில உரிமையாளர்களுக்கும் சிறப்பு நோக்க வாகனத்திற்கும் (SPV) இடையே இறுதி செய்யப்பட வேண்டும்.
7. பத்திரதாரர்களுடனான மெஸ்ஸானைன் (Mezzanine) கடன் மூலம் நிதியுதவிக்கான விதிமுறைகளை இறுதி செய்வதற்கான சிறப்பு நோக்க வாகனத்திற்கான (SPV) ஒப்புதல்.

3. தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநர் தனது 18.02.2021 நாளிட்ட கடிதத்தில், தமிழக அரசின் செயல்திறன் பார்வையின் கீழ் குடியிருப்பு பகுதிகளின் நெரிசலை குறைக்கும் வகையில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு சொந்தமான 3.15 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.832.40 கோடி மதிப்பீட்டில் LEED பிளாட்டினம் தரச் சான்றிதழ் பெற்ற வணிக இடத்தின் கோபுரம் I மற்றும்

Verified RealEstate™

கோபுரம் II இரண்டு கோபுரங்களை உள்ளடக்கிய தமிழ்நாடு வணிக மையத்தை, மேம்படுத்த பின்வருவனவற்றிற்கு அரசிடம் அனுமதி கோரியுள்ளார்: -

i. சென்னை, நந்தனம், அண்ணா சாலையில் கோபுரம் I(2 அடித்தளம் + தரைத்தளம் + 20 தளங்கள்) மற்றும் கோபுரம் II(2 அடித்தளம் + தரைத்தளம் + 16 தளங்கள்) கட்டுவதற்கான திருத்தப்பட்ட திட்ட மதிப்பு ரூ.832.40 கோடிக்கான (நிலத்தின் விலை உட்பட) திருத்தப் பெற்ற நிர்வாக ஒப்பளிப்பு வழங்கவும்
ii. கோபுரம் I மற்றும் கோபுரம் II -ஐ இணைக்கும் வளைவு வான் பாலம் கருத்துருவினை கைவிடவும்
iii. கோபுரம் III-ன் கட்டுமானம் கருத்துருவினை கைவிடவும்.

4. மேலும், தனது 14.05.2022 நாளிட்ட கடிதத்தில் கோவிட் பெருந்தொற்று தாக்கத்திற்கு பிறகு தற்போதைய சந்தை நிலைமையை அறிய M/s. Cushman & Wakefiled என்ற நிறுவனத்தை பணியமர்த்தி ஆய்வு செய்யப்பட்டு, ஆய்வறிக்கையில் தமிழ்நாடு வணிக மையம் மேம்பாடு திட்டத்தினை கால அவகாச அடிப்படையில் ஒன்றன்பின் ஒன்றாக கட்டப் பரிந்துரைக்கப்பட்டது. அதன்படி, இப்பொருள் வாரியக் கூட்டத்தில் வைக்கப்பட்டு வாரிய தீர்மானம் எண்.11.02 நாள் 25.03.2022-ல் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது அதற்கான ஆணையை அரசிடம் வேண்டியுள்ளார்.

i. மறுமதிப்பீட்டு அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டபடி பழைய தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய தலைமையக கட்டடத்தின் நிலத்தில் வணிக / அலுவலக இட மேம்பாட்டை செயல்படுத்துவதற்கு ஒப்புதல் அளித்து, தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநர் உரிய நடவடிக்கை எடுக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.
ii. ஈ.வெ.ரா பெரியார் மாளிகை, 30 HIG தனிநபர் குடியிருப்பு, வாரிய அலுவலர் குடியிருப்பு, ஜனதா ஹோட்டல் ஆகியவை அமைந்துள்ள இடங்களை நிலை-2-ல் ஒன்றாக ஒருங்கிணைத்து வணிக அலுவலக/ இடத்தின் வளர்ச்சியை ஒத்திவைத்தல்.
iii. ரூ.832.40 கோடி நிர்வாக ஒப்புதலுக்காக அரசுக்கு அனுப்பப்பட்ட முந்தைய திட்ட கருத்துருவினை திரும்பப் பெறுவதற்கான ஒப்புதல் அளிக்கவும்.

5. மேற்காணும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநரின் கருத்துருவினை, 22.07.2023 அன்று அரசு தலைமைச் செயலாளர் தலைமையில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய திட்டம் தொடர்பாக நடைபெற்ற கூட்ட நடவடிக்கை முடிவின் அடிப்படையில் ஆய்வு செய்து, சென்னை, நந்தனம், அண்ணா சாலையில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு சொந்தமான நிலத்தில் ரூ.832.40 கோடி மதிப்பீட்டில் மொத்தம் 3.15 ஏக்கர் நிலப்பரப்பில் LEED பிளாட்டினம் தரச் சான்றிதழ் பெற்ற வணிக இடத்தின்

Verified © RealEstate

கோபுரம் I மற்றும் கோபுரம் II இரண்டு கோபுரங்களை உள்ளடக்கிய தமிழ்நாடு வணிக மையம் மேம்பாட்டை திரும்ப பெறுதல் மற்றும் கோபுரம் I மற்றும் கோபுரம் II-ஐ இணைக்கும் வளைவு வான் பாலம் மற்றும் கோபுரம் III கட்டுமானம் கைவிடுதல் தொடர்பான தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநரின் கருத்துருவை ஏற்று அரசாணை (நிலை) எண்.8, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (வீவ3-2) துறை, நாள் 13.01.2021 மற்றும் அரசாணை (நிலை) எண். 21, வீட்டுவசதி மற்றம் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள். 01.02.2021 அரசாணைகளை திரும்பப் பெறலாம் என இதன்மூலம் ஆணையிடுகிறது.

6. இவ்வரசாணை நிதித் (உட்கட்டமைப்பு-III) துறை, நாள். 06.12.2023 ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி. சமயமூர்த்தி
அரசுச் செயலாளர்.

பெறுநர்
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சென்னை - 107.

நகல்:-
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை – 9.
மாண்புமிகு அமைச்சர் (வீ.வ. (ம) ந.வ.) அலுவலகம், சென்னை -09.
தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலர்,
சென்னை – 9.
முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச்செயலர்,
நிதித்துறை, சென்னை - 09.
செயலாளர் அவர்களின் தனிச் செயலர்,
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, சென்னை - 09.
வீட்டுவசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித் (அ.ந.மு./வ.செ.) துறை, சென்னை - 09.
இ.கோ./உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

15/02/2024
பிரிவு அலுவலர்.

15.2.24

Verified by RealEstate